இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 99 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 03 – புதன்கிழமை 19 நவம்பர் 2025 – திருச்சி ★★ 12 + 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 99: Thiruvalluvar Year - 2056 - Karthigai 03 - Wednesday 19 November 2025 - Trichy ★★ 12+10 Pages ₹ 5.00

## “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தின் மூலம்

# நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 2.50 கோடி பேர் பயன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, நவ. 19 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அறிமுகம் செய்யப்பட்ட “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தின் மூலம் கடந்த நான்கரை ஆண்டுகளில் 2 கோடியே 50 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். இந்தச் சாதனை நிகழ்த்தியதற்காக மருத்துவத் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

சாமானிய மக்களும் தரமான மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பாக வருமுன் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ நலத்திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றில் மிக முக்கியமான திட்டம் தான் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்.

இந்த திட்டத்தின் மூலமாக சுகாதார பணியாளர்கள், கிராமப்புறங்களில் உள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று, இலவசமாக நோய்களுக்கு பரிசோதனை செய்து மருந்துகளை வழங்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் தொற்றா நோய்களை தடுக்கும் நோக்கில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள முன்னோடி திட்டமே மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் (Makkalai Thedi Maruthuvam Thittam). இந்த திட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாமனப்பள்ளி என்ற கிராமத்தில் 2021 ஆகஸ்ட் 5 ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் வாயிலாக மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் நோயாளிகளின் வீடுகளுக்குத் தேடிச் சென்று மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்ற திட்டங்களில் இந்த மக்களைத் தேடி மருத்துவமும் ஒன்றாக கருதப்படுகிறது.



### திட்டத்தின் நோக்கம்!

பெருகி வரும் தொற்றா நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்கவும், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட சாமானிய மக்கள் மாதந்தோறும் உரிய மருத்துவ சேவையினை பெறவும், பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வீடுகளுக்கே நேரடியாக சென்று சுகாதார பணியாளர்கள் மூலமாக சிகிச்சை, மருந்து, மாத்திரைகளை வழங்குவது தான் மக்களை தேடி மருத்துவத்தின் அடிப்படை நோக்கமாகும்.

### திட்டத்தின் நன்மைகள்!

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு, உடல்நலக்குறைவு உள்ளவர்களுக்கும் அவர்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று பரிசோதனை செய்யப்படுகின்றன.

பரிசோதனை செய்யப்படுவதோடு, நோய்க்கான உரிய ஆலோசனை, சிகிச்சை, மருந்து மற்றும் மாத்திரைகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதன் மூலமாக சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக சம்பந்தமான பிரச்சினைகள், இதய நோய் போன்ற தொற்று அல்லாத நாள்பட்ட நோய்களை ஆரம்பக் கட்டத்தில் கண்டறியப்படுகின்றன.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு மாதாந்திர மருந்துகள் வீட்டிற்கே வந்து வழங்கப்படும். அதேபோல், பிசியோதெரபி சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கும் தொடர்ந்து சிகிச்சை வழங்கப்படும். மேலும், சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களுக்கு கையடக்க டயாலிசிஸ் இயந்திரங்கள் மூலம் டயாலிசிஸ் வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல், ஒரு மாதம் டயாலிசிஸ் செய்வதற்கு மட்டும் மொத்தம் 90 capd பைகள் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டம் மக்களின் வீடுகளுக்கே சென்று மருந்துகளை விநியோகிப்பதால், மருந்துகளை தவறாமல் எடுத்துக் கொள்ளும் பழக்கமும், நோயின் அளவு கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் நிலையும் உருவாகி உள்ளது. மேலும், தொற்றா நோய்களால் ஏற்படும் திடீர் இறப்புகளும் குறைந்த வண்ணம் இருக்கிறது.

இந்த திட்டத்தின் வாயிலாக, ஒரு பெண் செவிலியர், ஒரு தன்னார்வலர், ஒரு இயன்முறை மருத்துவர் எனக் குழுவாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதால், நிறைய பேருக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் நான்கு ஆண்டுகளில் 2.50 கோடி மக்களின் நலம் காத்துள்ள மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**நான்கு ஆண்டுகளில் 2.50 கோடி மக்களின் நலம் காத்துள்ள மக்களைத் தேடி மருத்துவம்!**

**தடம் மாறாத பயணம் தொற்றா நோய்களின் கட்டுப்பாடு எனச் சாதனை படைத்து, ஐ.நா. விருதை வென்ற இத்திட்டத்தின், 2 கோடியே 50 லட்சமாவது பயனாளியான தஞ்சை மாவட்டம் தென்னங்குடியைச் சேர்ந்த மனோன்மணி அவர்களுக்கு மருந்துப் பெட்டகத்தை வழங்கியுள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**நலமான தமிழ்நாட்டை உருவாக்கிடும் இத்திட்டத்தைக் கண்காணித்து சிறப்புறச் செயல்படுத்திவரும் துறையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும், களத்தில் உறவென நின்று மக்களைக் கவனித்துக் கொள்ளும் மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

எஸ்.ஐ.ஆர்.ரை எதிர்த்து

## உச்சநீதிமன்றத்தில் – இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மனுத் தாக்கல்!



புதுடெல்லி, நவ. 19 –

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர்.–ஐ எதிர்த்து தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்நிலையில், SIR க்கு எதிராக இந்திய யூனியன் முஸ்லிம் லீக், உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. கட்சியின் செயலாளர் பி.கே.குஞ்சாலி குட்டி தாக்கல் செய்துள்ள மனுவில், கேரளாவில் S.I.R பணிகளால் மன உளைச்சல் ஏற்பட்டு தேர்தல் அலுவலர் தற்கொலை செய்துகொண்டது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், S.I.R. பணிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த முடியாது என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கேரளாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள எஸ்.ஐ.ஆர். பணிகளை உடனடியாக ஒத்தி வைக்க உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

---

மதினாவில் பேருந்து விபத்து:

## 42 இந்தியர்கள் உயிரிழப்பு !

ரியாத், நவ. 19 –

சவூதி அரேபியாவில் புனிதப் பயணம் மேற்கொண்ட 42க்கும் மேற்பட்ட இந்தியர்கள் சாலை விபத்தில் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள மெக்காவில் உம்ரா எனும் புனித பயணத்தை முடித்துக்கொண்டு யாத்ரீகர்கள் மதீனாவுக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர். உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணியளவில் முஃப்ரிஹத் நகரில் சென்று கொண்டிருந்த பேருந்தும், டீசல் டேங்கர் லாரியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில், 20 பெண்கள்,11 குழந்தைகள் உட்பட 40க்கும் மேற்பட்டோர் உடல்கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்தில் பலியானவர்களில் பெரும்பாலானோர் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. தீயணைப்புத்துறையினருடன் உள்ளூர் மக்களும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

---

# கேரளாவில் எஸ்.ஐ.ஆர். புறக்கணிப்பு போராட்டம்!

## பணிச்சுமை காரணமாக பி.எல்.ஓ. அதிகாரி தற்கொலை!

*திருவனந்தபுரம், நவ. 19 -*

கேரள மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை புறக்கணித்து பி.எல்.ஓ. அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் பணிச்சுமை காரணமாகவே பி.எல்.ஓ. அதிகாரி ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

கேரளாவில், வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்ப்பது, படிவங்களை அளித்து பூர்த்தி செய்ய அறிவுறுத்துவது, உரிய விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வது உள்ளிட்ட வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான பணிகளை பி.எல்.ஓ எனப்படும் பூத் லெவல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே, கண்ணூர் மாவட்டம் பையனூரைச் சேர்ந்த அனீஷ் ஜார்ஜ் என்ற பி.எல்.ஓ அதிகாரி எஸ்.ஐ.ஆர் பணிச்சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் கேரளாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்விவகாரம் கேரளாவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் ஒன்றிய அரசு மீதும், தேர்தல் ஆணையத்தின் மீதும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. பா.ஜ.க.வின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே தேர்தல் ஆணையம் வேலை செய்வதாகவும் அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. இந்நிலையில் மாநிலம் தழுவிய அளவில் பி.எல்.ஓ. அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறைவான விண்ணப்பங்கள் வழங்கிய பி.எல்.ஓ. அதிகாரிகளுக்கு விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

---

வழக்கமான வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு மட்டும் நடைபெறும்!

# பா.ஜ.க. ஆளும் அசாம் மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். நடத்தப்படாது!

## அசாம் மாநில அரசின் கோரிக்கையை ஏற்ற தேர்தல் ஆணையம்!

*ஷில்லாங், நவ. 19 -*

பா.ஜ.க. ஆளும் அசாம் மாநிலத்தில் SIR என்கிற சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் நடத்தப்படாது என தகவல் வெளியாகி உள்ளது. வழக்கமான வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு மட்டும் நடத்த தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது.

கடந்த 4 ஆம் தேதி 12 மாநிலங்களில் வாக்காளர் தீவிர திருத்தம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, புதுவை, கேரளா, மேற்குவங்கம் ஆகிய 4 மாநிலங்கள் உள்ளன.

ஆனால் தற்போது பா.ஜ.க. ஆட்சி நடைபெற்றுவரும் அசாம் மாநிலம் இதில் சேர்க்கப்படவில்லை. அசாம் மாநிலத்துக்கு மே மாதத்துக்கு முன்னதாக தேர்தல் நடத்த வேண்டும். அசாம் மாநிலத்தில் தேசிய குடியுரிமை பதிவு விபரங்கள் அடுத்த ஆண்டு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் வாக்காளர் சிறப்பு திருத்தம் தற்போது நடத்த கூடாது என்று அசாம் பா.ஜ.க. அரசு தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் அசாமில் தேர்தலுக்கு முந்தைய வழக்கமான வாக்காளர் பட்டியல் திருத்தம் மட்டுமே நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது. இதற்கான அறிவிப்பு ஓரிரு நாட்களில் வெளியாகும் என்று தெரிகிறது.

கேரளாவில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற இருப்பதால் SIR பணிகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேரள தலைமை தேர்தல் அதிகாரி வைத்த கோரிக்கையை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.